
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1138

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

52

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ஒரே இரத்தம் ; மாற்றம் என்பது சொல் அல்ல; செயல்!

“தாழ்த்தப்பட்டவங்க, பிற்படுத்தப்பட்டவங்க நாலு பேரு படிக்கிறது, ரெண்டு பேரு உத்தியோகத்துக்குப் போறது. அதோட முன்னேற்றம் முடிஞ்சு போகுது. அப்படிப் படிச்சவன் பட்டணத்துல போய் ஒக்காந்துகிட்டு ஏதாச்சும் பதவி பவிசுகளத் தேடிக்கிட்டு தன்னையும் ஒரு உயர்ந்த சாதிக்காரன் மாதிரி பாவலாப் பண்ணிக்கிறானே தவிர, அவனால இந்த சமுதாயத்துக்கு ஒரு செல்லாக்காசு பயன்கூட கிடையாது. அதனாலதான் சொல்றேன், நம்ம சமுதாயத்துல சில பேர் பல பேர்னு இல்லாமே எல்லோருமே படிக்கணும்”

“சுக்கு நூறாக்க வேண்டியது ஆளை இல்லை, சாதி வெறியை விச ஊசி மாதிரி போட்டு இந்த சமுதாயத்தைக் கெடுத்து வச்சுருக்கிறது சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் தான். அதத்தான் சுக்குநூறாக்கணும்”

இப்படியான, புரட்சிகரமான வசனங்களை, ‘ஒரே இரத்தம்’ திரைப்படத்தில் காட்சிக்குக் காட்சி அள்ளி தெளித்திருப்பார் முத்தமிழறிஞர் கலைஞர்.

பண்ணையடிமை மாரியின் (வீராசாமி) இளையமகன் நந்தகுமார் (மு.க.ஸ்டாலின்) வெளியூரில் படித்துவிட்டு ஊருக்கு வரும் காட்சி

**நந்தகுமார் :** அண்ணே... வண்டிக்காரண்ணே...

திருக்கைவால் முனியாண்டி: என்னடா, தமிழ்நாட்டுல வண்டிக்காரன இவ்வளவு மரியாதையா கூப்பிட ஆரம்பிச்சுட்டாங்க! எனப் பேச்சைத் தொடங்கி வண்டியில் ஏறிச் செல்வான்.

**முனியாண்டி :** ம்... தம்பி கிராமத்துல எந்த வீடு?

**நந்தகுமார் :** பண்ணையார் பரமசிவம் இருக்கார்ல...

**முனியாண்டி :** ஆமா... அய்யா கும்புடுறேன் தம்பி. எக்குத்தப்பா ஏதாவது பேசியிருந்தா மன்னிச்சுக்கங்க.

**நந்தகுமார் :** இல்ல... அவர் வீட்டுல வேலை செய்யுறாருல மாரி...

**முனியாண்டி :** (முகம் மாறுகிறது) ஆமா மாரி...

**நந்தகுமார் :** அவரோட மகன்தான் நான்

இந்த உரையாடலுக்குப் பின்னர், முனியாண்டி நந்தகுமாரை, ‘வண்டியைவிட்டு கீழே இறங்குடா’ என கீழே தள்ளிவிட்டு, ‘கீழ் சாதிக்கார பயலுக்கு வண்டி கேட்குதா’ எனத் திட்டுவான். அதற்கு நந்தகுமார்,

**நந்தகுமார் :** நான் தாழ்த்தப்பட்டவன். நீங்க சாதி இந்து. ஊர்ல நீங்க ஒரு ஓரத்துல குடியிருக்கீங்க. நான் ஒரு ஓரத்துல குடியிருக்கேன். நம்ம ரெண்டு பேருமே ஒண்ணுதான்; என்பான்.

அதற்கு முனியாண்டியோ, ‘கழுதையும் குதிரையும் ஒரே சாதியாடா?’ எனக் கூறிவிட்டு, ‘வண்டி தீட்டுப் பட்டுப் போச்சு’ எனத் தள்ளிவிடுகிறான்.



அப்போது அங்கு வரும் மகேஷ், நந்தகுமாரைத் தூக்கி காயத்துக்கு மருந்திட்டு, குடிசைக்கு அழைத்து வருகிறான், அதைக் கண்டு நந்தகுமார் வீட்டு பண்ணையாள் மாரி பதறுவார்.

**மாரி :** அய்யா... உங்க கொலமென்ன கோத்திரமென்ன நீங்க போயி, என் மகனத் தொட்டுத் தூக்கி காயத்துக்கு மருந்து போடுறதாவது. இந்தப் பாவம், ஏழு தலைமுறைக்கும் எங்களதத்தான் சுத்தும். எங்கள மன்னிச்சுருங்கய்யா எனக் காலில் விழச் செல்வார்.



படங்கள் உதவி : ஞானம்

இப்படி, சமூக ஏற்றத்தாழ்வுகளை மனதில் தாங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களையும், பார்ப்பனியத்தின் சாதிக் கட்டமைப்பையும் தனது கதையின் வழியாக, உரையாடல்களின் வழியாக கண்முன் கொண்டு வந்திருப்பார் கலைஞர்.



### நான்கு வர்ணம் எனும் அநீதி

சாதி இந்துக்கள் பயன்படுத்தும் குளம், தாழ்த்தப்பட்டவர் நீர் எடுத்ததால், குளம் தீட்டுப்பட்டுவிட்டது என ஊர் பஞ்சாயத்து நடக்கும்.

“ஆண்டவனே பார்த்துப் படைச்சதுதான்டா சாதி. நெத்தியில ஒரு சாதி, தோள்ல ஒரு சாதி, முட்டில ஒரு சாதி, பாதத்துல ஒரு சாதி” எனப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் முனியாண்டி பேசுவான். அதற்கு எதிராக நந்தகுமார் பேச,

“இது மாதிரி இளம் இதயங்கள் துடிச்சாதான் சமுதாயத்துல போலி வேசம் போட்டு நடிக்கிறவங்க கொட்டமெல்லாம் அடங்கும்” எனப் பண்ணையாரின் மகன் மகேஷ் ஆதரவாக நிற்பான்.

**மகேஷ் :** 20-ஆம் நூற்றாண்டு முடிஞ்சு 21-ஆம் நூற்றாண்டு வரப்போகுது, விண்வெளியில ஆராய்ச்சி நடத்துற இந்தக் காலத்துல சாஸ்திரம் சம்பிரதாயமா?

**பண்ணையார் :** விண்வெளி என்னடா! சந்திர மண்டலத்துக்கே போயி, பத்து ஏக்கர் நிலம் வாங்கி பங்களா கட்டித் தங்கினாலும் அங்கேயும் பஞ்சாயத்து உண்டு, விசாரணை உண்டு, தீர்ப்பும் உண்டு எனக் கிராமத்தின் சாதி பஞ்சாயத்து இறுக்கத்தைக் காட்டுவார்.

கிராமப் பஞ்சாயத்தில் தனக்கு அளிக்கப்பட்ட அவமானம் தாளாது, தாளமுத்து அந்தக் குளத்திலேயே குதித்து தற்கொலை செய்து கொள்கிறான். தாழ்த்தப்பட்ட மக்கள், நந்தகுமார் தலைமையில் ஊர் நடுவே மேடையமைத்து தாளமுத்து படத்தைத் திறந்து வைக்கின்றனர் அப்போது...

**நந்தகுமார் :** உயிரோடு இருந்து இந்த ஊருக்குச் சொல்ல முடியாத பாடத்தை இதோ என் நண்பன் தாளமுத்து படமாக மாறிச் சொல்கிறான். தீண்டாமை எனும் கொடிய மலைப்பாம்பின் வயிற்றுக்குள் தாளமுத்துவைப் போன்ற இளமான் குட்டிகள் சமாதியாவதுதான் காந்தி பிறந்த இந்த நாட்டில் பெரியார், அண்ணா, டாக்டர் அம்பேத்கர் போன்ற சமுதாயப் புரட்சியாளர்கள் தோன்றிய இந்த நாட்டில் இன்னமும் தொடர்கதையாக இருப்பதா? என்ற கேள்விக்குறியோடு இந்தப் படத்தைத் திறந்து வைத்திருக்கிறேன், என்று பேசுகிறான்.

அப்போது, சாதி இந்துக்கள் வாழும் ஊர்த்தெருவுக்குள், பட்டியலினத்தவர் மீட்டிங் போடுவதா எனத் தாக்குதல் நடைபெற, அங்கு பண்ணையார் மகன் மகேஷ் வந்து மோதலைத் தடுத்து நிறுத்தி, புரட்சிகரமான வசனகங்களைப் பேசுவான்.

**மகேஷ் :** இரண்டு தரப்பிலயும் மாத்தி மாத்தி அடிச்சிக்கலாம். ஆனால், உங்க ரெண்டுபேர் தோள்லேயும் மாறி மாறி ஏறி சவாரி செய்றது யார்? உயர்ந்த சாதிக்காரங்க. அத மறந்திட்டு தாழ்த்தப்பட்டவங்களும் பிற்படுத்தப்பட்டவங்களும் உங்களுக்குள்ளே மோதிக்கிறது இந்த சமுதாயத்தோட தலையெழுத்தாப் போச்சு.

இதெல்லாம் யாராலே? நாட்டுல சாதிகளைப் பிரிச்சு அதுக்கான சாஸ்திரங்களை எழுதி வச்சிருக்காங்களே அந்த உயர்ந்த சாதிக்காரங்க அவங்க நல்லாத்தான் இருக்காங்க. ஆனா, நீங்க அடிச்சுக்கிறீங்க. நாலு வேங்கைகள் சேர்ந்து நாற்பதாயிரம் மான்கள் கூட்டத்த வேறுபடுத்திருச்சு. ஆனா, இப்ப அடிச்சுக்கிறது மானும் வேங்கையுமில்ல. மானும் மானும்தான் அடிச்சுக்கிறீங்க.

அந்தக் காலத்துல மானும் வேங்கையும் சேர்ந்து ஒரே துறையில தண்ணி குடிச்சதா சொல்லியிருக்காங்க. ஆனா இப்ப? அட்லீஸ்ட் மானும் மானுமாச்சும் ஒரே துறையில தண்ணி குடிக்க வேண்டாமா?

**முனியாண்டி:** நீங்க பாட்டுக்கு கண்டபடி, சாதியை ஒழிக்கிறோம். மதத்த ஒழிக்குறோம்னு பேசிட்டுப் போய்டுவீங்க, ரோட்டுல இருக்கிற சாதியை அழிச்சுப் பிரயோஜனமில்ல. உண்மையா முழுசா ஒழிக்க முடியுமா? என அப்பாவியாகக் கேள்வியைக் கேட்பான்.

“நிச்சயமா முடியும். அதுக்காக என் உயிரையும் கொடுப்பேன்” என உயர்சாதியைச் சேர்ந்த மகேஷ் தனது சாதிப்பற்றினைத் துறந்து சாதி ஒழிப்புக்காகப் பேசுவான். குறிப்பாக மகேஷ் , பண்ணையாள் மாரியின் மகளை திருமணம் செய்துகாட்டுவான். சாதி, தீண்டாமை ஒழிப்பு என்பது வெறும் வாய் வார்த்தைப் பிரச்சாரமாக இல்லாது சாதி மறுப்புத் திருமணங்களின் மூலமாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கிற கருத்தை கலைஞர் தனது வசனத்தின் மூலம் பதிவு செய்திருப்பார்.

### இரண்டே வர்க்கம்தான்

“உயிரு உள்ளவங்க, உடம்புல வலு உள்ளவங்க எல்லோருமே உழைக்கணும். உழைக்க ஒரு வர்க்கம், உண்டு கழிக்க ஒரு வர்க்கம் அப்படிங்கிற இந்த சமூக அமைப்பை மாத்த பெரிய புரட்சியே பண்ணனும்” என்பதுதான் கலைஞர் விரும்பிய சமுதாயம் என்பதை ‘ஒரே இரத்தம்’ படத்தின் வழி உணர்த்தியிருப்பார். அந்த உரையாடலை நந்தகுமார் என்கிற கதாபாத்திரத்தின் வழி பேசினார் கலைஞர். அந்த நந்தகுமார்தான் இன்று தமிழ்நாட்டை ஆளும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ‘இங்கொரு சமூகப் புரட்சி நடத்தப்பட வேண்டும்’ என்று அவர் பேசிய வசனத்தைத்தான், ‘எல்லோருக்கும் எல்லாம்’ என, தமிழ்நாட்டின் முதலமைச்சராக நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் என்றால், மிகையில்லை.

...காட்சி விரியும்

## நிர்வாகத் திறனற்றவர் மோடி!

சமையல் எரிவாயுப் பற்றாக்குறை, நாடு முழுவதும் மக்களின் இயல்பு வாழ்க்கையை, உணவகத் தொழிலைக் கடுமையாக பாதித்துள்ளது. இதுதொடர்பாக, பதிவிட்டுள்ள திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் ‘விடுதலை’ இராசேந்திரன், “கண்மூடித்தனமாக அமெரிக்கா - இஸ்ரேலை ஆதரிக்கும் தவறான வெளிநாட்டுக் கொள்கைதான் இந்த நெருக்கடிகளுக்கு எல்லாம் முக்கிய காரணம். அமெரிக்கா எந்த நேரத்திலும் ஈரானுடன் போர் தொடுக்கும் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தும், தேவையான அளவு எரிவாயுவைச் சேமிக்க ஒன்றிய அரசு தவறிவிட்டது.

கையிருப்பு வைக்கும் அளவுக்கு, இங்கே கிடங்குகளும் இல்லை என்பது அதைவிட மோசம். மங்களூர் மற்றும் விசாகப்பட்டினத்தில் இரண்டு கிடங்குகள் மட்டுமே உள்ளன. அதைக்கொண்டு இரண்டு நாள் மட்டுமே சமாளிக்க முடியும். கடந்த பத்து ஆண்டுகளில் சிலிண்டர்களின் தேவை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இந்த நிலையில், கடந்த நாடாளுமன்ற பட்ஜெட்டில் அமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது பங்குக்கு சிலிண்டருக்கு தரும் மானியத்தில் 27 சதவிகிதத்தை வெட்டினார். அது மட்டுமா? 2025-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், புதிதாக சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் இல்லை என்றும் அறிவித்துவிட்டார். ஆனால், உதான் திட்டத்தின் கீழ் ரூ.477 கோடி செலவில், விமான நிலையங்களைக் கட்டி, பிறகு ஆள்வராத காரணத்தால் மூடினார்கள். ரூ.3,000 கோடி செலவில் ராமன் கோயில் கட்டினார்கள். சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு மட்டும் தயாராக இல்லை.

எதிர்வரும் நெருக்கடிகளை முன்கூட்டியே அறிந்து அதற்கான திட்டங்களை வகுப்பதுதான் மிகச் சிறந்த நிர்வாகம். இந்த நிர்வாகத்திறனை மு.க.ஸ்டாலின் அவர்களிடம் இருந்துதான் மோடி கற்றுக்கொள்ள வேண்டும்” என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் தந்த வாழ்த்து!



டி.எஸ்.நந்தினி செல்வகுமார்

1999-ஆம் ஆண்டு, அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு, தென் சென்னை மாவட்டம் சார்பில் கல்லூரி அளவிலான ‘பாரதிதாசன் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டி’ நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு ஆறுதல் பரிசு பெற்றிருந்தேன். என் தந்தை சுப்பிரமணியன், உத்தண்டி கிளைக் கழகச் செயல்வீரர். அவர் கேட்டுக்கொண்டதன்பேரில், சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் என்.பி.ராமஜெயம் அவர்கள், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் சந்திக்க அழைத்துச் சென்றார். தலைவர் எனக்கு ரூ.5,000 அளித்து, நன்றாகப் படிக்குமாறு வாழ்த்தினார். பொக்கிஷத்தைப் பாதுகாப்பதுபோல, இந்தப் படத்தை என் தந்தை பாதுகாத்து வருகிறார்.

– டி.எஸ்.நந்தினி செல்வகுமார்,
முத்தையா நகர், சிதம்பரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள்

### கழக அரசின் பண்பு!

1971-ஆம் ஆண்டு, இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற கலைஞர், வானொலி மூலம் மக்களிடம் உரையாற்றினார். “தொழிலாளர் கிளர்ச்சியாகினும், மாணவர் கிளர்ச்சியாகினும், விவசாயிகள் கிளர்ச்சியாகினும் கிளர்ச்சி நடத்துவோரைப் பற்றி சிந்திக்காமல், அதற்கான காரணத்தை உணர்ந்து அவைகளில் வீண் கௌரவப் பிரச்சினை பார்க்காமல், முறையீடுகளுக்குச் செவி சாய்த்து, நியாயமெனப்பட்டதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டத் தேவையில்லை என்பதே அரசு தொடர்ந்து கடைப்பிடிக்க விரும்பும் பண்பாகும்” என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131